**<u>20–வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம், எழும்பூர் @ அல்லிக்குளம்,</u>**

**<u>சென்னை – 03.</u>**

தேதி 10.02.2026

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | – | C.C.No. 4309 /2018 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | பு.த.சா.1 |
| பெயர் | – | Halayudh kumar |
| தந்தை பெயர் | – | |
| முகவரி | – | |
| வயது | – | |

2023–ம் வருடத்திய பாரதிய சாட்சிய அதிநியம் படி இன்று 10.02.2026 என்னால் உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(வாதி ஆஜர். எதிரி ஆஜரில் இல்லை. மனு அனுமதிக்கப்பட்டது.)

**<u>நேரம்</u>** : 03.45 மணி.

**முதல் விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமுலத்தை தற்போதுஎனது தரப்பு சாட்சியமாக சமர்ப்பித்து கொள்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் தெரியும். படித்துபார்த்துதான் கையொப்பமிட்டேன். மேற்படி பிரமாண வாக்குமுலத்தில் குறிப்பிடபட்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன்.

1) 29.3.2014 தேதியிட்ட ரூபாய் 3,54,72,603/– க்கான காசோலை வழங்கல் குறித்து 1 வது எதிரியின் கடிதம் **பு.சா.ஆ. 1** ஆகும்

2) ஆக்சிஸ் வங்கியின் 15.4.2015 தேதியிட்ட மேற்படி தொகைக்கான காசோலை எண் 104954 **பு.சா.ஆ.2** ஆகும்.

3) மேற்படி காசோலை 12.4.2014 ல் மேற்படி காசோலை வங்கியில் செலுத்தப்பட்டதற்கான ரசீது **பு.சா.ஆ.3** ஆகும்.

4) 15.4.2014 ம் தேதி மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவின் திருப்புதல் குறிப்பாணை **பு.சா.ஆ.4** ஆகும்.

5) 13.5.2014 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் கூடியதன் நகல் **புசாஆ.5** ஆகும். ( மேற்படி ஆவணம் நகல் என்பதால் எதிரியின் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது. மேற்படி நகல் ஆவணமானது 2ம் நிலை சாட்சியமாக அனுமதிக்க வேண்டி மனு செய்யப்பட்டு அனுமதிக்கபட்டுள்ளதை கருத்தில் கொண்டு மேற்படி ஆவணம் 2ம் நிலை சாட்சியமாக குறியீடு செய்யப்படுகிறது.)

6) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதற்கான ஒப்புதல் அட்டையின் நகல் **புசாஆ.6** ஆகும்.

7) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்புக்கான பதில் 16.6.2014ம் தேதியிட்ட பதில் அறிவிப்பின் நகல் **புசாஆ.7** ஆகும்.

( மேற்படி புசாஆ 5 முதல் 7 வரையான ஆவணம் நகல் என்பதால் எதிரியின் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது. மேற்படி நகல் ஆவணமானது 2ம் நிலை சாட்சியமாக அனுமதிக்க வேண்டி மனு செய்யப்பட்டு அனுமதிக்கபட்டுள்ளதை கருத்தில் கொண்டு மேற்படி ஆவணம் 2ம் நிலை சாட்சியமாக குறியீடு செய்யப்படுகிறது.)

8) புகார்தாரரின்அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. **புசாஆ.8** ஆகும்.

9) புகார்தாரருக்கு வழங்கப்பட்ட பொது அதிகார பத்திரம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. **புசாஆ. 9** ஆகும்.

<u>குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.</u>

மேற்படி சாட்சியம், சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சரிடம் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி சாட்சியத்தை சாட்சிக்கு என் முன்பாக படித்துக்காண்பிக்கப்பட்டு, அவர் முழுமையாக உள்ளது என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

20-வது பெருநகர குற்றவியல் நடுவர்,
எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை-03.